தேர்ச்சி –3.0
தேர்ச்சி மட்டம் –3.1
செயற்பாடு – 3.1.1
பாடவேளை – 10

5th week (2021.02.06)

# பயன்பாட்டுத் தேவைகளுக்காக அலங்கார நிர்மாணிப்புக்கள்

1. விறாந்தையில் அழகுக்காக வைக்கப்படும் சாடியொன்றை திட்டமைத்து நிர்மாணித்தல்
2. காற்றோட்டத் துவாரங்களில் இடப்படும் பூவேலைப் பாடுகளைக் கொண்ட செதுக்கல்களை வரைதல்.
3. அறுகோண வடிவமுடைய தாம்பாளம் ஒன்றுக்குப் பொருத்தமான முழுத்தள அலங்காரமொன்றை நிர்மாணிததல்.

**கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

- ❖ அழகுக்காக வைக்கப்படும் சாடிகளைப் பற்றி பண்டைய கால, தற்கால உண்ணாட்டு, வெளிநாட்டு காரணிகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்தறிய வழி நடத்துக.
- ❖ சூழலை அவதானித்துக் கண்டறிந்த வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய நிர்மாணிப்புக்காக பருமட்டான படம் ஒன்றை வரைய மாணவர்களை வழி நடத்துக.
- ❖ திட்டமிட்ட வடிவங்களை நிர்மாணிக்கையில் சாடியை வைக்க உத்தேசித்துள்ள இடத்தின் மீது கவனஞ் செலுத்துக.
- ❖ சூழலில் இருந்து கண்டறிந்த வடிவங்களை ஆக்கபூர்வமான முறையில் எளிமையாக நிர்மாணிக்கலாம் என்பது பற்றி மாணவர்களை அறிவுறுத்துக.
- ❖ நிர்மாணிப்பின் பக்கத் தோற்றம் தென்படும் விதத்தை விளக்க இரு படங்களை அமைக்கும் படி மாணவர்களை வழி நடத்துக.
- ❖ திட்டமிட்டதற்கிணங்கச் சாடியை நிர்மாணிக்க உத்தேசித்திருக்கும் ஊடகத்தினையும் நிர்மாணிப்பின் இயல்பையும் தீர்மானிக்க உதவி புரிக.
- ❖ திட்டமிட்டதற்கிணங்க தெரிவு செய்யப்பட்ட சாடியை நிர்மாணிக்கவிருக்கும் ஊடகத்தைத் தயார் செய்து கொள்ள உதவுக.
- ❖ கம்பி, கம்பி வலை, கட்டுக்கம்பி போன்றவற்றின் துணையுடன் அடிப்படைக் கட்டமைப்பை அமைக்க அறிவுறுத்தல்களை வழங்குக.

- ❖ பயன்படுத்தும் ஊடகம், உபகரணங்கள் என்பவற்றை நேர்த்தியாகக் கையாளுதல்

- ❖ நிர்மாணிப்பு நல்ல பூரணப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்

**மேலதிக செயற்பாடுகள் :**

**3.1.2** பாரம்பரிய வேலைப்பாடுகளைக் கொண்ட தங்க ஆபரணப் பேழையொன்றை வரைந்து வர்ணம் தீட்டுக.

**3.1.3** மழைப்பீலியில் இருந்து மழை நீர் விழும் இடத்தில் வைக்கப் பொருத்தமான அழகிய சாடியொன்றுக்கான படத்தை முப்பரிமாணத்துடன் வரைந்து வர்ணம் தீட்டுக.

**3.1.4** நிறுவனமொன்றில் பாவனைக்குகந்த விதத்தில் ஈரக்குடைகளை இடக்கூடிய அழகிய சாடியொன்றினை திட்டமிட்டு, கிரேக்க களி மட்பாண்டங்களில் உள்ள ஓவியங்களைச் சார்ந்த வேலைப்பாடுகளால் அலங்கரித்தல்.

**3.1.5** தேயிலை ஏற்றுமதி செய்ய உகந்த பொருத்தமான சாடியொன்றை வரைவோம்.

**3.1.6** மூலிகைப் பானம் விற்பனை செய்யும் விற்பனை நிலையத்துக்கு முன்னால் வைக்கக் கூடிய பொருள் புலப்படும் விதத்திலான பாரிய அளவிலான சாடியொன்றினை வரைக.